கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,

பெரியகுளம்.

<u>அசல் வழக்கு எண்.</u> 157/2023 நாள். 15.04.2026

<u>வாதி தரப்பு சாட்சி எண்.</u> 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | ஊர் | : | செட்டிக்குளம் |
| தந்தை பெயர் | : | குருசாமி | தாலுகா | : | ஊமச்சிக்குளம் |
| தொழில் | : | ஆசிரியர் | வயது | : | 60/2026 |

ஆணையுறுதி சட்டப்படி சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். 1908ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் 1ம் சாட்சியின் முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பில் நிருபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

1. 13.03.2020 ஆம் தேதியிட்ட என்னிடம் 1ம் பிரதிவாதி சங்கத்தின் சார்பாக 2ம் பிரதிவாதி ரூ.10 லட்சம் ரொக்கம் கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக பிறப்பித்துக் கொடுத்த பதிவு செய்யப்படாத கடன் ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.1

2. 22.02.2023 ஆம் தேதியிட்டு கடன் தொகைக்குரிய அசரையும், வட்டியையும் கேட்டு நான் எனது வழக்கறிஞர் மூலம் பதிவுத் தபால் மூலம் அறிவிப்பு ஒன்றை பிரதிவாதிகளுக்கு அனுப்பி வைத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.2

3. 25.02.2023 ஆம் தேதியில் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதை காட்ட கூடிய Postal track consignment இணையவழி நகல் வா.சா.ஆ 3

பிராது படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.04.15 12:34:29 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.